# உயிர்ப்பதிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உயிர்ப்பதிவு

அருட்பணி அன்ரன் ஸ்ரீபன்

யாழ் மறைமாவட்டம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்பணியாளர்களுக்கு...



அருட்தந்தை மேரி பஸ்ரியன்
06.01.1985



அருட்தந்தை K. ஜோண் லொரட்
01.01.1996



அருட்தந்தை T.N. ஜிம்பிறவுன்
20.08.2006



அருட்தந்தை N. பாக்கிய றஞ்சித்
26.09.2007



அருட்தந்தை M.X. கருணாரட்ணம்
20.04.2008



அருட்தந்தை M.T. சறத்ஜீவன்
18.05.2009



அருட்தந்தை G.A. பிரான்சிஸ் யோசப்
18.05.2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருமுதல்வரின் ஆசிச்செய்தி

எமது யாழ். மறைமாவட்ட குருவான அருட்தந்தை அ. அன்ரன் ஸ்ரீபன் அடிகளாரின் 'உயிர்ப்பதிவு' என்ற நூலுக்கு ஆசிச்செய்தி வழங்குவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். எழுத்துத்துறையில் இவருக்கு இருக்கும் திறமையை இவர் எனது மாணவனாக இருக்கும் போதே அறிந்து கொண்டேன். தன்னகத்தே பல திறமைகளை கொண்ட இவரின் இந்த முயற்சி பாராட்டுக்குரியது. இந்த நூலில் இவர் தனது உணர்வோடு கூடிய உண்மை அனுபவத்தை வெளிக்கொணர் கின்றார். இந்த நூலை வாசிக்கும் போது எம்மக்கள் சுமந்த துன்பங் களை, இரத்த வரலாற்றை மீண்டும் நினைவுபடுத்துவதாய் அமை கின்றது.

இறுதிக்கட்டப் போரில் மக்களோடு மக்களாக பல துன்பங்களை ஏற்று இவர் பெற்ற மறக்க முடியாத அனுபவத்தை பகிர்ந்து கொண் டதை நான் கேட்டிருக்கின்றேன். இவர் முகாமில் இருக்கும் போது நான் இவரைச் சந்தித்த போது பகிர்ந்து கொண்ட அனுபங்கள் பலவற் றையே இந்நூலில் குறிப்பிடுகின்றார். நாமும், எம் மக்களும் கடந்து வந்த இரத்தம் நிறைந்த வரலாற்றை எழுத்து வடிவிலே வெளிக் கொணர்வதில் இவருக்கு இறைவன் கொடுத்த மனத்துணிவும் வியப்புக்குரியது.

எனவே அருட்தந்தையின் முயற்சியைப் பாராட்டுகின்றேன். தொடர்ந்தும் இறைவன் இவருக்கு நிறைவான ஞானத்தைக் கொடுத்து. வழிநடத்த ஆசிக்கின்றேன். இந்த நூலைப் படிக்கும் ஒவ்வொருவரும் கண்ணீர் நிறைந்த எம் வரலாற்றை மறவாது இறை நம்பிக்கையோடு பயணிக்க இறையாசீர் வேண்டி நிற்கின்றேன்.

அருட்பணி யஸ்ரின் ஞானப்பிரகாசம்
குருமுதல்வர்,
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

'உயிர்ப்பதிவு' ஒரு வரலாற்று பதிவு. 2006 ஆம் ஆண்டு நடுப்பகுதியிலிருந்து 2009 ஆம் ஆண்டு முடிவு வரை என்னுடைய வாழ்வில் வந்து போன நேரடியான அனுபவங்களின் பதிவு.

மன்னார், தம்பனையில் ஆரம்பித்த வன்னிப்போர், முள்ளி வாய்க்கால் நந்திக்கடலூடாக செட்டிகுளம் மெனிக்பாம்வரை எட்டிப் பிடித்தது. இந்த காலகட்டத்தில் மனிதம்பட்ட துன்பங்களின் சில பதிவு கள்தான் இங்கு உயிர்ப் பதிவாக பதியப்பட்டுள்ளது.

இப்பதிவில் உள்ள சில விடயங்களை நான் மீண்டும் இரைமீட்டும் போது, இது என்னுடைய பதிவா என்கின்ற ஒரு கேள்வி எனது மனதிலே தோன்றுகிறது.

நான் ஒரு எழுத்தாளன் அல்ல. ஆனால் காலம் என்னை எழுத நிர்ப்பந்தித்தது கண்டேன், அனுபவித்தேன் அதற்குள் இருந்து எழுத ஆரம்பித்தேன். அதுதான் இப்பதிவு.

இது ஓர் கற்பனைப்படைப்பு அல்ல, நிஜம், வாழ்விற்கான போராட்டம். குறைந்தளவு சொற்களில் மிகவும் நீளமான நிகழ்வுகளை வெளிக் கொணர இயன்றவரை முயன்றுள்ளேன்.

இப்பதிவில் கதைபேசும் படங்களும் உண்டு. இப்புகைப்படங் களில் அனேகமான படங்களை பதிவாக்கியது என்னிடமிருந்த ஒரு புகைப்படக் கருவியே. நேரடியாக பதிவு செய்யப்பட்ட படங்களும் நிகழ்வு களை வெளிக்கொணரும் பணியில் எனது சொற்களுக்கு உயிர்த்து டிப்பை கொடுத்துள்ளன.

உயிர்ப்பதிவை வாசிப்பவர்கள் நிச்சயமாக இதனை உணர்வார் கள் என்ற நம்பிக்கையோடு, பதிவுக்குள் உங்களை அழைக்கின்றேன்.

அருட்பணி. அ. அன்ரன் ஸ்ரீபன்,
பங்குத்தந்தை,
தூய திருக்குடும்ப ஆலயம்,
மல்வம், உடுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நண்பனே!

கடந்தகால
அனுபவங்கள்
நாங்கள்
கண்ணீரோடு சேமித்த
சொத்துக்கள்
எம் வாழ்வுக்கான
வழிகாட்டிகள்
இவற்றை
வரையறுக்கவோ
வர்ணிக்கவோ
வார்த்தைகள் போதாது
இருந்தாலும்
ஒரு சில
வார்த்தைகளில்
முடியுமானால்
உனதாக்கிக்கொள்





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இரத்த வரலாறு

இது
இரத்தத்தால் வரையப்பட்ட
நீண்ட வரலாறு
இந்த
இரத்த வரலாற்றில்
இது
ஓர் அத்தியாயம்
தம்பனை தொடங்கி
முள்ளிவாய்க்கால் வரை
சிலுவை சுமந்தவர்களின்
பதிவுகள்
இந்த
துன்பியல் பயணத்தில்
மாண்டவர்
மீண்டவர்
கணக்கெடுப்பு
இல்லாத நிலையிலும்
கல்லறை இல்லாது
காற்றோடும்
கடலோடும்
மண்ணோடும்
கரைந்தவர்போக
மீண்டவர்
விடுதலை உயிர்ப்புக்காக
ஏங்கும் இவ்வேளையில்
இத்தொகுப்பு
நடந்ததை
மீளாய்வு செய்யட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடப்பெயர்வு

தம்பனையில் சண்டையாம்
மடுவை கைப்பற்றி விட்டார்களாம்
மக்கள் இடம்பெயர்கிறார்களாம்
மக்களோடு சேர்ந்து
மடு மாதாவும் இடம்பெயர்வாம்
இப்படித்தான் ஆரம்பித்தது
வன்னி இடப்பெயர்வு


சிறுதுளி பெருவெள்ளம்போல்
வெள்ளம் ஓடிவர
தம்பனையில் ஆரம்பித்த
இடப்பெயர்வு
பெரியமடு, அடம்பன்
ஆண்டான்குளம், விடத்தல்தீவு
இலுப்பைக்கடவை, வெள்ளாங்குளம்
முழங்காவில், வவுனிக்குளம்
மல்லாவி என பரவிப்பாய்ந்து
மக்களை இளைப்பாறவிடாது
துரத்தியடித்தது

ஓரிடமல்ல
இரண்டிடமல்ல
பலபத்து இடங்களை
மாறி மாறி மக்கள்
கால் கடுக்க கடந்தார்கள்

வன்னேரிக்குளம், ஜெயபுரம்
வீதியோரமெங்கும் மக்களின்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




சிறு சிறு கூடுகள்
வீதியாலே செல்லமுடியாது
எங்கும் புழுதி மண்டலம்
குண்டும் குழியும் நிறைந்த
கிரவல் வீதி
அரக்கியரக்கி நகரும்
வாகனத் தொடரணிகள்
இடையிடையே
சிறு சிறு மழைத்தூறல்கள்

ஓடிவரும் வெள்ளம்
எல்லா வெள்ளங்களையும்
அள்ளி வருவது போல்
அங்கிருந்தும் இடப்பெயர்வு
ஐயங்கன் குளம், முறிகண்டி
முறிப்பு, பூநகரி, முற்கொம்பன்
குஞ்சுப்பரந்தன், கிளிநொச்சியென
வீதியே மக்களால் நிறைந்தது

ஒருசில நாள்களில்
கிளிநொச்சி நகரமும்
மக்கள் இல்லா
சூனிய நகரமாய் போனது
ஆங்காங்கே நாற்றமெடுக்கும்
மிருகங்களின் இறந்த உடலங்கள்
விட்டுச் சென்ற எச்சசொச்சங்களை
பிடுங்கி எடுக்க
திருடர் கூட்டம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



வீதிகள் களைத்துவிட்டன
ஒருசில மீற்றரை கடக்க
பலபத்து மணித்தியாலயங்கள்
பயணம் செய்ய வேண்டியநிலை
பரந்தன் முல்லை
வீதி நீளமெங்கும்
அரக்கியரக்கி நகரும்
வாகனங்களும் மக்களும்
இவைகள் வீதியை விட்டு நீங்க
தொடர்ச்சியான
வீதித்திருத்தங்களும்
குறுக்கு வீதிகள் அமைப்பும்
வீதிகள் குறைந்துவிட்டன
தற்போது உள்ளது
ஒரே ஒரு வீதி
பரந்தன் முல்லை வீதி

கண்டாவளை, வட்டக்கச்சி
தர்மபுரம், விசுவமடு
மக்கள் நகருகிறார்கள்
தற்போது உள்ளது
சொற்ப பொருள்களே
ஒரு தறப்பாளும்
ஒரு பங்கருக்குரிய குற்றிகளும்
குறைந்தது இதையாவது
கொண்டு செல்ல வேண்டும்
என்ற ஆதங்கத்தில் மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசரத்துக்கு வீதியால்
யாருமே செல்லமுடியாது
சாண்கணக்கில் நகரும்
வாகனங்கள்


சோனாவாரி மழையும்
விட்டபாடில்லை
வெளிகள், தரவைகள்
வயற்காணிகள் எங்கும்
மக்கள் கூடாரம் அமைத்து
இருப்பிடம் செய்ய
இருப்பிடங்கள் எல்லாம்
வெள்ளத்தில் தாண்டன
கண்டாவளை வெளிக்குள் வெள்ளம்
வட்டக்கச்சி, கட்டைக்காடும்
வெள்ளத்தில்
பெரியகுளமும் சொல்லத்தேவையில்லை
மக்கள் சிலரை வெள்ளம்
இழுத்துச் சென்றதாகவும் கதை

மழை விட்டாலும்
வெள்ளம் வற்றியபாடில்லை
அப்படி மழை
இது இயற்கை வெள்ளம்
மக்களை இருக்கவிடாது
துரத்தியது செயற்கை வெள்ளம்

தேராவில் குளமும் நிரம்பிவிட்டது
குளத்தை சுற்றியிருந்த வீதி
வெள்ளத்தில் தாண்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வீதிக்கு மேலே
இரண்டடி, மூன்றடி
வெள்ளம் நின்றது
மூழ்கிய பாதை
தேக்கங்காட்டுக்குள்ளாலே
அசுரவேகத்தில்
வெளிவரத் தொடங்கியது
ஒரு சில நாள்களில்
மிகவும் வேகமாக
தரமான பாதையொன்று
உருவானது மக்கள் பயணத்துக்கு

தேராவில் குளம் வற்றியபாடில்லை
மக்களின் கண்ணீரால்
அது மீண்டும் மீண்டும் நிரம்பியது
படகு சேவையும் அதில்
நடத்தப்பட்டது
முன்னொரு போதும்
இப்படி நடக்கவில்லையாம்

தேராவில்லுக்கும் புதுக்குடியிருப்புக்கும்
இடையில் மட்டும்
நான்கு, ஐந்து இடங்களில்
ஆறு, ஏழு அடி உயரத்துக்கு
பேய்ப் பாய்ச்சல்
பாய்ந்தது தண்ணீர்

விசுவமடு குளம்
உடையப்போகிறது
உடையார்கட்டு குளம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நீர்மட்டத்தை தாண்டிவிட்டது
எச்சரிக்கை அறிவிப்புக்கள்
வானொலியில் அலறியது
அணையை பலப்படுத்த
ஆளணியும் கோரப்பட்டது
வெள்ளம்
உடையார்கட்டு, காளிகோயிலடியில்
ஒரு சிலரை இழுத்தும் சென்றது

தொடர்ச்சியான இடப்பெயர்வு
பெரும் மழையோடு சேர்ந்த
இடப்பெயர்வு
இதைத்தான்
துன்பத்துக்கு மேல் துன்பம்
என்று சொல்லுவார்கள்

இம்முறை மக்கள் அச்சத்தோடு
வீதியில் நகர்ந்தார்கள்
வீதியெங்கும் ஷெல்
மழையாய் பொழிந்தது
ஆங்காங்கே ஷெல் விழுந்து
வாகனச் சாரதிகள் சாக
பற்றியெரிந்த நிலையில்
வீதிக்கு நடுவில் வாகனங்கள்

இப்படித்தான் எங்களுடைய
இடப்பெயர்வு
வாகனங்கள் செல்ல முடியாது
வெறுமனே மக்கள்தான்
நகரமுடியும் என்ற
கட்டத்துக்கு வந்தது



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சுதந்திரபுரம் சென்ற மக்கள்
அதே பாதையில்
உயிரை கையில் பிடித்து
ஓடிய கதையும் உண்டு
சுதந்திரபுர சந்தியிலிருந்து
சுதந்திரபுரம் செல்வதென்றால்
சொல்லத்தேவையில்லை
மிகவும் கடினம்
அந்த மூன்று நான்கு
கிலோ மீற்றருக்குள்தான்
இலட்சக்கணக்கான மக்கள்
அடைந்துகிடந்தனர்

முல்லைத்தீவும் ஏற்கெனவே
சூனியமாய் போயிருந்தது
இதற்கிடையில்
புதுக்குடியிருப்பும் இடம்பெயர்வு
மக்கள் எல்லோரும்
மாத்தளன், இரணைப்பாலை
வலைஞர்மடம், இரட்டைவாய்க்கால்
முள்ளிவாய்க்கால் நகர்ந்தார்கள்

சுதந்திரபுரத்திலிருந்து
இரணைப்பாலைக்கு
தேவிபுரத்தை ஊடறுத்து
ஒரு காட்டுப்பாதை
இடைக்கிடையில்
நீருக்கு மேல் குற்றிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்காங்கே
எறிகணை தாக்குதலில்
பற்றியெரிந்த மரங்கள்
ஆறுபாயும், சேறுகிடக்கும்
ஒற்றையடி பாதை
எல்லாவற்றையும் தாண்டித்தான்
நெடும் பயணம்

இரணைப்பாலையும் இடம்பெயர்வு
வலைஞர்மடம்
மக்களின் மையமானது.
அங்கிருந்தும் ஒட்டுமொத்த
மக்கள் முள்ளிவாய்க்கால்
வட்டுவாகல் நகர்வு

கொஞ்சம் கொஞ்சமாக
காவிச் சென்ற எல்லாம்
முற்றுமுழுதாக
பறிபோனதும்
ஓடிய இயந்திரங்களும்
இயங்கிய மனித வாழ்க்கையும்
பூச்சியத்துக்கு வந்ததும் இங்குதான்

எத்தனை இடங்களை
நாங்கள் நடந்து கடந்தோம்
எத்தனை இடங்களில்
குடியிருக்க நாங்கள்
கூடுகள் கட்டினோம்
எல்லாம் வீண்போயின
வீணாயின



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பங்கர் வாழ்வு

கிளிநொச்சியில் ஆரம்பித்த
அகழி வாழ்க்கை
முள்ளிவாய்க்காலில்
அகழிக்குள் வாழ்க்கை
அழியுமட்டும் நீடித்தது

கிபிருக்கு பயந்து
வீதியெங்கும்
வளாகங்களெங்கும்
பங்கர் வெட்டியதும்
சைரன் ஓசை கேட்டு
அந்தந்த இடங்களில்
பங்கருக்குள் நிலையெடுத்ததும்
பின்பு சிறிதுகாலத்தில்
ஷெல் குத்தும்
சத்தம் கேட்டு
அந்த பங்கருக்குள் படுத்ததும்
நன்றாக நினைவிருக்கு

இடப்பெயர்வு
வீதியெங்கும் மக்கள் வெள்ளம்
புதிய பல இடங்கள்
எமது இடம்
உடையார்கட்டு
அங்கு சில காலம்
அமைதியாய் இருந்ததும்
மீண்டும் ஷெல்லுக்கு பயந்து
பங்கர் அமைத்ததும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமைத்த மறுகணத்தில்
ஷெல்மழை பொழிந்ததும்
இரவு முழுவதும் பங்கருக்குள்
படுத்துறங்கியதும்
நன்றாக நினைவிருக்கு

பங்கருக்குள் எல்லா வசதிகளும்
தொலைக்காட்சிப் பெட்டி
வானொலிப் பெட்டி
உலர் உணவுப் பொருள்கள்

ஒருநாள்
உடையார்கட்டே
அதிர்ந்தது
பங்கரை சுற்றி
குண்டுமழை பொழிய
எமது பங்கர் மீதும்
குண்டு விழுந்தது
விழுந்த குண்டில்
ஆலய வளாகம் பற்றி எரிந்தது
நடுவில் நாம் சிக்கினோம்
எம் கண்முன்பாகவே
எல்லாம் எரிந்து
தீயுடன் சங்கமமாகியது
பற்றிய தீயை
அணைக்க நாம் போராடினோம்

(2009.01.30 உடையார்கட்டு தூய யூதாததேயு ஆலய வளாகத்தின் மீது பல்குழல் எறிகணை தாக்குதல் நடத்தப்பட்டது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடையார்கட்டுக்கும்
இருட்டு மடுவுக்கும் இடையில்
ஒரு போராட்டம்
புதிய பங்கர்
புதிய இடம்
இரண்டு அடுக்கு பங்கர்
கீழே இருக்கை
மேலே படுக்கை

இரவோடுடிரவாக
அங்கிருந்தும் இடப்பெயர்வு
இரவுப்பயணம்
பயங்கரமான பயணம்
சுதந்திரபுர சந்தியிலிருந்து
புதுக்குடியிருப்பு வரை
பிரதான வீதியெங்கும்
பிணவாடை
மனிதனா
மிருகமா
இனங்காண முடியவில்லை
எல்லா உடலங்களும்
அழுகிய நிலையில்
நாற்றமெடுக்கும் பயணம்
வீதியில் சற்று வேகம்
குறைந்தாலும்
உயிரை கொல்லும்
எறிகணைகள்
எங்களுடையது
வாகன தொடரணி
தொடரணியை தொடர்ந்தும்
எறிகணைகள் வெடித்தன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரணைப்பாலையில்
புதிய குடித்தனம்
அங்கும் புதியரக
பங்கர் ஒன்று
பங்கருக்கு தென்னைமரம்
மந்துவிலில் தறிப்பு
தென்னந் தோப்பில்
எமக்கு விருப்பம் போல்
நீளமரம், நேர்மரம்
ஆபத்தான வேலை
ஆபத்தான இடம்
ஆனால்
நல்ல அனுபவம்

நிலத்துக்கு மேலே
பங்கர் அமைத்தோம்
அதற்குள் திருப்பலியும்
ஒப்புக்கொடுத்தோம்
சிறிதுகால இரணைப்பாலை
பங்கர் வாழ்க்கை
ஓரிரவுக்குள் உடனடி மாற்றம்

புதிய இடம்
வலைஞர் மடம்
வீதியால் செல்லமுடியாது
வீதியே இல்லை
வீதியில் வாகன
அணிவகுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலைஞர் மடத்திலும்
பங்கர் வாழ்க்கை
நடு இரவு வேளைகளிலும்
பங்கரே அடைக்கலம்
எம்மை சுற்றி
மனிதர்கள் இறந்தார்கள்
கொத்துக்குண்டுகள் விழுந்தன
சன்னங்கள் சீறி பாய்ந்தன
பங்கர் இல்லாமல்
வாழ்க்கையே இல்லை

ஓர் இரவு
மறக்கமுடியாத இரவு
தீப்பிழம்புகளும்
எறிகணைகளும்
எமது பங்கரை சுற்றி
ஊழிக்கூத்தாடிய இரவு
வாகனம் தீப்பற்றி எரிய
வெளிச்சத்தை கண்ட வண்டு
படம் எடுத்து கொடுக்க
எறிகணை செதில்கள்
எம்மிடத்தை
தவிடுபொடியாக்கின
உயிர்ப்பிச்சை கேட்டு
கூக்குரல் இட்ட நேரமது

(2009.04.23 வலைஞர்மடம் ஆலய வளாகத்தின் மீது அகோர எறிகணைத்தாக்குதல் நடத்தப்பட்டது.)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



இரவு முடிய
பகல் விடிய
நாம் கலைக்கப்பட்டோம்
எம்மால் நம்ப முடியவில்லை
நாம் இருந்தது
எம்இடம் தானா?
உருக்குலைந்திருந்தது
கண்ணுக்கெட்டிய தூரம்வரை
மீற்றருக்கு ஒரு எறிகணையல்ல
பல எறிகணைகள்
விழுந்திருந்தன
கடவுள் துணையால்
நாம் காப்பாற்றப்பட்டோம்

முள்ளிவாய்க்கால் நோக்கி
நகர்ந்தோம்
அங்கும்
ஓரிடம் பார்த்தோம்
பார்த்த இடத்தில்
குந்து முன்
எந்திரப் பறவைகளின்
எச்சங்கள் அவ்விடத்தை
பதம் பார்க்க
பார்த்த இடம் மாறியது
பல சிரமங்களின் பின்
இடம் எடுத்து
நிலை எடுத்து
பங்கர் வேலை
முடிவுக்கு வரும் நாளில்
மீண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகர வேண்டியது
கட்டாயமானது

முன்பு பார்த்த
பழைய இடம்தான்
எம் தஞ்சம்
ஒரு நாளிலேயே
பங்கர் வேலை பூர்த்தி
அங்கும் சில காலம்

அந்த இடத்தில் ஒரு நாள்
பல்குழல் எம்மை சுற்றி விழ
நாம்
பலமென நினைத்த
பங்கருக்கு அருகில் இருந்த
சுவர் இடிந்து
பங்கருக்கு மேலும்
பங்கரை சுற்றி படுத்திருந்த
எம்மவர் மேலும்
சரிந்து விழுந்தது
உயிர் அழிவு இல்லை
காயங்கள் மட்டும்தான்
சற்று நிம்மதி

இறுதி இடம்
இறுதி இடம் என்று
பல இடங்கள் இறுதியாகின
பல மனிதருக்கு
வாழ்பவர்களுக்கோ
இடங்கள்
நீண்டுகொண்டே சென்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நாமும் எமது இறுதி இடத்தை
அடைந்தோம்
அங்குதான்
அருட்தந்தை சறாவையும்
இழந்தோம்
அங்கு
மனித அவலங்களின் ஓலம்
உயிர்ப் பிச்சைக்கான கூக்குரல்
உயிரற்ற பிணங்கள்
காயங்களோடு மனிதர்கள்
உளம் பாதிப்புற்ற போராளிகள்
உருக்குலைந்த
உயிரற்ற உறவுகளை
அடக்கச் சடங்கின்றி
கைவிட்டுவிட்டு வந்த
மனிதர்களின் ஒப்பாரிகள்
வயோதிபத்தால் தள்ளாடும்
வயோதிபர்கள்

ஏதோ ஒரு மூலையில்
ஆங்கில திரைப்படத்தில்
கற்பனையில் வந்த
அவலக் காட்சிகள்
எம் கண்முன்பாக

தம்பனையிலிருந்து
படிப்படியாக குறைந்த
மக்களின் சொத்துக்கள்
வலைஞர்மடம் வரும்போது
ஒரு தறப்பாளாகவும்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ஒரு பங்கருக்குரிய
பொருளாகவும் மாறின
படிப்படியாக பங்கர் பொருள் குறைய
தறப்பாள் ஒன்றே
குடும்பச் சொத்தாக மாறியது
பங்கர் பொருள்கள்
கைநழுவி  போனபோது
மனித உயிரும்
கொஞ்சம் கொஞ்சமாக
அழிந்து கொண்டு சென்றது
தறப்பாள் கட்டும் முன்
பங்கர் அமைத்த
கதையும் பெரிது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


## நெருப்பு

பிழையான கணக்கெடுப்பு
வன்னிக்கு உணவு
யானைப் பசிக்கு
பொரி மாதிரி
A9 பாதை பூட்டு
வாகன தொடரணி வந்தது
A9 திறந்தது
சுதந்திரபுர மைதானத்தில்
உணவு பங்கீடு நடந்தது
இடைக்கிடை
எறிகணையும் அவ்விடத்தை
பதம் பார்த்தது
உணவுக்கு வரிசையில் நின்ற
மக்கள் மண்ணோடு போனார்கள்
ஒரு கட்டத்தில்
WFP கைவிரிக்க
ICRC துணையுடன்
மாத்தளன் கடலில்
ஓர் உணவு கால்வாய்
சொற்ப உணவு வந்தது
மக்களின் வயிறு
நெருப்பென பற்றி எரிந்தது
தனிமனிதனுக்கு
உணவில்லையெனில்
இவ் ஜெகத்தினை
அழித்திடுவோம் என்ற
ஊர்க்குருவி
பறந்து போனது.

WFP: World Food Programme. உலக உணவு திட்டம்
ICRC: International Committe of Red Cross - சர்வதேச செஞ்சிலுவை சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மரணம்

மரணங்கள்
மலிந்த மண்ணில்
மனிதம் மௌனிக்க
மனிதர் நாங்கள்
மரணித்த போது
உலகமே
மௌனியாகியது

நாம்
குடியிருந்த மண்ணிலே
மரணங்கள்
எத்தனை விதம்

சன்னங்களோடு
இறந்து பிறந்த
மழலைகள்
பிறந்தும்
பால் முகம்
மாறாத
பிஞ்சுப் பாலகர்கள்

பிறந்தும்
வினாடி கூட
அகலாமல்
தாயும் சேயும்
உடல் சிதறிய
பரிதாபங்கள்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தத்தித் திரியும்
பருவத்திலே
சன்னங்கள் துளைத்து
மடிந்து விழுந்த
மரகத முத்துக்கள்

சுற்றிச் சுற்றி
எத்தனை மரணங்கள்

கணமும் தாமதியாமல்
கால்கடுக்க ஓடியபோது
பாதையில்
சன்னங்கள்பட்டு
மடிந்து விழுந்த
பிள்ளைகள்

அவர்கள்
உடலங்களை
தாங்கிப்பிடிக்கும்
கணத்தில்
உயிரை மாய்த்த
பெற்றோர்கள்

கணமும் தாமதித்தால்
உயிர் பிரியுமென்று
ஓடியவர்கள்

வீதியில்
மடிந்தவர்களுக்கு
அடக்கச்சடங்கும் இல்லை
ஆறடி நிலமும் இல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசவத்தில்
குண்டுபட்டு தாய் சாக
கண்விழித்த கணத்தில்
வீறிட்டு அழும்
மழலைகள்


கஞ்சிக் கொட்டில் முன்
காத்துநின்றவர்கள்
உலர் உணவுக்காக
வரிசையில் நின்றவர்கள்
மழலைகளுக்கு பால்மா
வாங்குவதற்கு
தவமிருந்தவர்கள்
பிணங்களாக
குவிக்கப்பட்டபோது
உலகமே மௌனமாகியது

எம்மருகில் இருந்து
குசலம் விசாரித்தவர்கள்
எம்மோடு ஒன்றாக
விளையாடியவர்கள்
எம்மருகில் பயணித்தவர்கள்
வீதிகளிலும்
வீடுகளிலும்
ஆலயங்களிலும்
எம் கண்முன்னே
மரணித்து
வீழ்ந்து போனார்கள்

(கஞ்சிக் கொட்டில் - மக்களுக்கு யுத்தத்தின்போது உணவு பரிமாறுவதற்காக அமைக்கப்பட்ட இடத்திற்கு வழங்கப்பட்ட பெயர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வைத்தியசாலைகள்
பிணங்களால் நிறைந்தன
பிணங்களுக்கு நடுவில்
குற்றுயிராயும் மனிதர்கள்
சத்திரசிகிச்சை கூடத்துள்
உயிர்கள் ஊசலாடின
அப்போது
குண்டுகளால்
வைத்தியசாலையும்
அதிர்ந்தது

பிணங்கள் மேலும்
சிதைந்தன
பிணங்கள் நடுவில்
உயிர் ஊசலாடிய
மனிதர்களும்
சத்திரசிகிச்சை கூடத்துள்
ஊசலாடிய உயிர்களும்
உதவிக்கரம் கொடுத்த
தாதிகளும்
பிணங்களாகினர்

வருகிறபோது
இறந்தவர்களை
குழிகளுக்குள்ளே
தூக்கிப்போட்டோம்
மண்போட
அவகாசம் இல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒன்றாக
பதுங்கு குழிகளுக்குள்
இருந்தபோது
குண்டுபட்டு
இறந்த உறவுகளை
கைவிட்டு
எம்முயிரை கைபிடித்து
ஓடினோம்

வீதியெங்கும்
சடலங்களும்
குற்றுயிராய் மனிதர்களும்
எல்லாவற்றையும்
ஏறிமிதித்தோம்

எத்தனையோ மரணங்களையும்
மரண ஓலங்களையும்
தாண்டியவர்கள்
பிணக்குவியல்களையும்
இரத்த ஆற்றையும்
கடந்தவர்கள்
நம்பிக்கையை
பிணமாக்காமல்
இன்னும் நம்பிக்கையோடு
வாழ்ந்து கொண்டிருக்கிறோம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உறுதி

பயணங்கள்
ஆபத்தான போது
பயணிப்பவர்கள்
வீதியில் மடிந்தபோது
நாங்களும்
பயணிக்க வேண்டிய தேவை
பயந்து நாங்கள்
பயணிக்காமல் விடவில்லை
பயணிக்கும் போதும்
உறுதியாக இருந்தோம்

பயணத்தில் மடிய நேரிடலாம்
மடியும்போது
விடுதலையின் விதைகளாக
மடிவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *சிவப்பு கப்பல்*

ஈர விழிகள்
கடலை நோக்கும்
வருமா வராதா?
வரும் என்றால்
சற்று நிம்மதி
ஷெல்லடி குறையும்
வீதிகள் ஒழுங்குபடுத்தப்படும்
வைத்தியசாலையில்
காயமடைந்தோர்
தொகை குறையும்
எங்கும் பரபரப்பு
காலையில் வந்த கப்பல்
இரத்தக் கறைகளுடன்
மாலையில் மறையும்

கப்பல் கண்ணைவிட்டு
மறையும் முன்
மீண்டும்
கொத்துக்குண்டுகள் விழும்
பல்குழல்கள் வெடிக்கும்
எறிகணைகள்
சாண்கணக்கில் பதம்பார்க்கும்

சிவப்பு கப்பல்: A9 பாதை பூட்டப்பட்ட பின் 2009 மாசி மாத நடுப்பகுதியிலிருந்து வைகாசி மாதம் ஆரம்பநாள் வரை ICRC துணையுடன் மாத்தளன் வலைஞர்மடம் முள்ளிவாய்க்கால் கடற்கரையூடாக காயமடைந்தவர்களை ஏற்றிச் செல்ல கப்பல் சேவை ஒன்று நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சன்னங்கள் பாயும்
வைத்தியசாலை
காயத்தால் நிரம்பும்
மீண்டும்
வருமா, வராதா
மரணப் பீதி
நெஞ்சைப் பிளக்கும்

இறுதி நாட்களில்
கப்பல் வரும்
வீதிகள் ஒழுங்குபடுத்தப்படும்
காயம்
வாகனத்தில் ஏற்றப்படும்
கண்ணுக்கு தெரிந்த கப்பல்
கரைதட்டாது
இழுபறிகள்
கருத்து முரண்பாடுகள்
இறுதியில்
பாதுகாப்பு அனுமதி
மறுக்கப்படும்
கப்பல் திரும்பும்
குருதி சிந்தல்களுடன்
சிவப்பாய்
காலையிலிருந்து
மாலைவரை கடலை உற்றுநோக்கிய
ஈரவிழிகள்
ஏமாற்றத்துடன்
பதுங்குகுழிகள் நாடும்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போர்க்களம்

நான்
ஒருபோதும்
போருக்கு சென்றதில்லை
ஆனால்
போர்க்களத்தில் நின்றதுண்டு
அங்கே
ஷெல் வெடிக்கும்
சன்னங்கள் பாயும்
விழுப்புண் ஏற்படும்
சாவு வரும்
மனித வெடிகுண்டுகள்
வெடிக்கும்
இன்னும் பற்பல
நடக்கும்

இறுதிப்போரில்
மக்கள் வாழ்விடம்
போர்க்களமானது
அங்கே
ஷெல் வெடித்தது
ரணங்கள் வலியெடுத்தது
சன்னம் பாய்ந்தது
மக்கள் மாண்டனர்
துடி துடித்தனர்
மனித உயிர்கள்
மாண்பிழந்தன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதிகளில்
இறந்து கிடந்தனர்
மிருகங்கள் போல


இவைகள்
போரின் வரவுகள்
போருக்கான செலவும் உண்டு

மனித உரிமை மீறல்கள்
போர்க் குற்றங்கள்
தடுப்பு முகாம்கள்
படுகொலைகள்
புதை குழிகள்
ஒவ்வொன்றாக
வெளிவர இன்னும்
பட்டியல் நீளும்

தற்போது போர்க்களம் மாறிவிட்டது
இலாப நட்டம்
பார்க்கப்படுகின்றது
இனி
விசாரணைகள் தொடரும்
உண்மைகள் வெளிவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இறுதிக்கணங்கள்

அங்குலம் அங்குலமாக
நிலம் பறிபோக
தந்திரோபாயம்
என்றார்கள்


அரக்கியரக்கி
தமிழினம் நகர
அண்டை நாடு
கைகொடுக்கும்
என்றார்கள்

கொத்துக் கொத்தாய்
உயிர்ப்பலி எடுக்க
மனித உரிமைகள்
கண்திறக்கும்
என்றார்கள்

அமெரிக்காவில்
ஆட்சி மாறுகின்றது
'ஒபாமா' கதிரை ஏறுகிறார்
இந்தியாவில்
தேர்தல் நடக்கிறது
காங்கிரஸ் கவிழும்
என்றார்கள்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



கடலில்
கப்பல் வரும்
ICRC
மத்தியஸ்தம்
வகிக்கும்
அமெரிக்கா கைகொடுக்கும்
'ஒபாமா' கதிரையேறிவிட்டார்
சற்றுப் பொறுங்கள்
என்றார்கள்

எல்லா கதைகளும்
புஸ்வாணம் ஆனது
அங்குல நிலமும்
பொசுங்கி போனது
ஏமாற்றம் மட்டுமே
எஞ்சி நின்றது
பின்பு

தம்பனையிலிருந்து
முள்ளிவாய்க்கால் வரை
காட்டிக்கொடுப்பு
என்றார்கள்
அண்டைநாடு
இந்தியா
இரட்டை வேடம்
என்றார்கள்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இரணைப்பாலை
பெட்டிச்சமரில்
பலம் அழிந்தது
துரோகி ஒருவனின்
சூழ்ச்சி என்றார்கள்


அமெரிக்காவிற்கு
கால அவகாசம்
போதாது
என்றார்கள்

எல்லோரும் சேர்ந்து
கழுத்தறுத்து விட்டார்கள்
தமிழன் கதை முடிந்தது
என்றார்கள்

எல்லாம் உண்மைதான்
ஆனால்
இருளுக்குப் பின்தான்
பிரகாசமான விடியல்
தோல்விக்குப் பின்தான்
தலைநிமிர்ந்த வெற்றி
என்பதும்
உண்மையே



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## ஞாபகம் வருதே

வன்னி வாழ்வு
செழிப்பான ஒரு வாழ்வு
பரந்த இடம்
பண்பாடான மக்கள்
காட்டு வாழ்க்கை
ஒட்டு மொத்தத்தில்
அது கொடுத்துவைத்த வாழ்க்கை

முழங்காவில் தொடங்கி
கூழாமுறிப்பு அளம்பில்
கட்டைக்காடு வரை
நீண்டு பரந்த வாழ்க்கை
இயற்கைவளம்
செழிப்பான இடம்
கிரவல் வீதி, புளுதிமண்டலம்
பம்பலான பயணங்கள்

A - 9 வீதி
கிளிநொச்சி, முறிகண்டி
கொக்காவில், மாங்குளம்
கனகராயன்குளம், புளியங்குளம்
பள்ளம், மேடு
பாடமான
இடங்கள்
இறுக்கமான காலத்தில்
பெற்றோல் அடிக்க
அடிக்கடி வவுனியாப் பயணம்
இந்த வழியால் தான்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புளியங்குளத்தில்
ஒரு முறை காற்றுப்போய்
பல மணிநேரம்
அந்த வீதியிலே
செலவழித்தது ஞாபகம்
கனகராயன் குளத்தில்
ஒருமுறை யானையை
கண்டு வீதியிலே
நின்று பார்த்த ஞாபகம்
இந்த வீதி
ஓட ஓட நீண்டுகொண்டே போகும்
மாங்குளம் பாலத்தை
கடந்தால்
ஒரு நிம்மதி
ஒரு சில நிமிட ஓட்டங்களில்
கொக்காவில் ரவர் தெரியும்
கொக்காவில் ரவர் தாண்ட
ஐம்பத்தைந்து ரவர் தெரியும்
பிறகு என்ன
கிளிநொச்சி தான்
இப்படித்தான் ஓட்டம் இருக்கும்
மணிக்கு எழுபது எண்பது
வேகத்தில்

A - 9 வீதிக்கு மேற்கு
படுவான்கரை
முழங்காவில், வலைப்பாடு
ஜெயபுரம், வன்னேரிக்குளம்
முறிப்பு, இலுப்பைக்கடவை


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விடத்தல்தீவு, ஆண்டான்குளம், மடு
இன்றும் பல வீதிகள்
ஞாபகமிருக்கு

இடப்பெயர்வோடு எமக்கு
அறிமுகமான வீதிகள்
எத்தனை தடவைகள்
இந்த வீதியால் சென்று
புழுதிபடிந்த மனிதர்களாக
மாறியிருப்போம்
உச்சந்தலையிலிருந்து
உள்ளங்கால் வரை ஒரே புழுதி
எத்தனை மனிதர்கள்
கண்ணீர் வடித்து வீதியால்
பயணித்திருப்பார்கள்

வடக்கு திசையாலே
பரந்தன் ஆனையிறவு
இயக்கச்சி அதனை
ஊடறுத்து புல்லாவெளி
கட்டைக்காடு, பூனைத்தொடுவாய்
இறுதியாக நான்
பணிசெய்த இடம்
எத்தனை தடவைகள் இந்தவீதியால்
பயணித்தபோது
மயிரிழையில் உயிர்தப்பினேன்
தனியாக நீண்டபயணம்
இவ்வீதியால் செல்லும்போது
நகர நகர எறிகணைகள் விழும்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இயக்கச்சி சந்தியை கடக்கும்போது
எனக்கு பின்னால் பல்குழல்
எறிகணைகள் வீழ்ந்து
வடலிகள் பற்றியெரிந்தது
ஞாபகம்

கட்டைக்காட்டில்
கரைவலை இழுத்ததும்
நான்கைந்து விமானங்கள்
நாம் இருந்த இடத்தை
பதம் பார்த்ததும்
கடற்கரை மண்ணில் நாம்
சுழன்று உருண்டதும்
ஞாபகமிருக்கு
விமானத்திலிருந்து
எமக்கு மேல் போட்ட குண்டு
எம் தலைக்கு மேல்
வெடித்ததையும்
முதல் தடவை
அங்குதான் நான் பார்த்தேன்

ஆனையிறவு வெளியால்
செல்லமுடியாத போது
ஊரியான் கொம்படி
மணல் தரவை
இடைக்கிடை சேறு
வாகனத்தடம் பார்த்து
பயணிக்க வேண்டும்
பாலை நிலத்தைப் போல்
காட்சி தரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இடையில் ஏதாவது
தடங்கலென்றால்
கதை முடிந்துவிடும்
எமக்கு பின் யாராவது
வந்தால்தான் உதவி
ஒரு நாள் இரவு
பன்னிரண்டு மணிதாண்டியும்
இந்த பாதையால் பயணித்த
ஞாபகம்

இந்த இடம் செல்ல
இன்னுமொரு பாதையுண்டு
சுண்டிக்குளத் தொடுவாய்
நல்லதண்ணீர் தொடுவாய்
ஊடறுக்கும் பாதை
மூன்று தொடுவாயை
தாண்ட வேண்டும்
மழை இல்லாவிட்டால்
தொடுவாயைச் சுற்றி ஓடலாம்
மழையென்றால் தொடுவாய் பாய
வள்ளத்தால்
கடக்க வேண்டும்
கஷ்ரம் என்று நினைத்தால் துன்பம்
முடியும் என்று நினைத்தால்
பயணம் இன்பம்
ஒருபோதும் சலிக்கவில்லை
இதனால் பயணிக்க
மனத்தைரியமும் வேண்டும்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


கிழக்கு
எழுவான் கரையிலே
வட்டக்கச்சி,தர்மபுரம்
விசுவமடு, உடையார்கட்டு
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு
அளம்பில், இரணைப்பாலை
வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால்
வட்டுவாகல்
இந்த வீதிகளால்
நடுச்சாமத்தில் கூட வலம்வந்த
ஞாபகம்

அருட்தந்தை பாக்கியரஞ்சித்
அடிகளாரின் இறப்பும்
சாமம் சாமமாய்
இந்தவீதியால் ஓடித்திரிந்ததும்
நன்றாக நினைவிருக்கு

கூழாமுறிப்பு ஒட்டுசுட்டான்
ஓரிருமுறை சென்ற ஞாபகம்
வீதிகள் நிறைய குண்டும் குழியும்
வட்டக்கச்சி, இராமநாதபுரம்
கல்மடு, இங்குதான்
இலட்சக்கணக்கான மக்கள்
இடம்பெயர்ந்து
கூடாரம் அமைத்திருந்தார்கள்
கல்மடு குச்சொழுங்கையை
மாறவிட்டால் பலமணித்தியாலங்கள்
சுழன்றடிக்க வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உடையார்கட்டு
இங்குதான் நாம் இடம்பெயர்ந்து
பலநாட்கள் இருந்தோம்.
நாம் இருந்த பங்கருக்கு மேல்
ஷெல் விழுந்ததும்
ஷெல்லுக்குப் பயந்து
இரவோடு இரவாக
பதுங்கிப் பதுங்கி
இருட்டுமடு நோக்கி
ஓடியதும் இங்குதான்

வலைஞர்மடம்
முக்கியமான இடம்
வன்னி மறைக்கோட்ட
குருக்கள் துறவிகள் அனைவரும்
ஒன்றாக இருந்த இடம்
வன்னி மறைக்கோட்ட
ஆலய சொத்துக்கள்
அனைத்தும் இழந்த இடம்
அருட்பணியாளர்கள்
ஜேம்ஸ் பத்திநாதர் காயப்பட்டதும்
வசந்தசீலன் கால்போனதும் இங்குதான்

இரட்டைவாய்க்கால்
இறுதிமட்டும் திருப்பலி
ஒப்புக்கொடுத்த இடம்
2009 உயிர்ப்பு ஞாயிறு வழிபாடுகள்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



இங்கும் வலைஞர் மடத்திலும்
மட்டும் தான் நடைபெற்றது

முள்ளிவாய்க்கால்
எமது இறுதி இடம்
அருட்தந்தை சறத்ஜீவனை
இழந்த இடம்
இரத்த ஆறு ஓடிய இடம்
இறந்த சடலங்களாலே
சூழப்பட்ட இடம்
இறுதியாக ஒருநாள் மட்டும்
மக்களோடு திருப்பலி
நிறைவேற்றிய இடம்

இப்படி
ஒவ்வோர் இடத்திலும்
ஒவ்வொரு நிகழ்வுகள்
ஞாபகம் வருதே



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பட்டினி

வாரி வாரி
வந்தோர்க்கெல்லாம்
உணவு கொடுத்த
வன்னி மண்ணில்
மக்கள்
சோறாக்க அரிசியில்லை
உலை வைக்க விறகில்லை


வீதிகளில் சிறுவர்கள்
தட்டுடன் உணவுக்கு
வலம்வர
பிள்ளைகள் வயிற்றை நிரப்ப
பெற்றோர்கள் கையேந்தும்
கையறுநிலை

அரிசி ரூபா எண்னூறை தாண்ட
மிளகாய்
இருபதாயிரத்தை எட்டிப்பிடிக்க
மூன்று தேங்காய் கொடுத்து
Passion Plus
மோட்டார் சைக்கிள்
விலைபோனது

ஒரு கிலோ அரிசிக்கு
ஒரு கிலோ மீன்
கடற்கரையில்
பண்டமாற்றம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




தேனீர் கொட்டில்களும்
கஞ்சிக் கூடாரங்களும்
ஆங்காங்கே முளைவிட
வாகனத்தில் வந்த வாய்ப்பன்
மதிய உணவாக
பரிமாறப்பட்டது

உணவு கப்பலின்
வருகைக்கு காத்திருந்து
அத்தி பூத்தால் போல்
தரைதட்டும் உணவை
ஒரு வேளையாவது ஆக்க
பங்கீட்டு அட்டையுடன்
சங்கங்களின் முன்
வயிறு எரிய மக்கள்
தவம் இருப்பு

காலையில்
பாலில்லா தனிக்கஞ்சி
மதியத்தில்
சோறும் பருப்பும்
இரவில்
ஏதாவது கிடைத்தால் மட்டும்
சாப்பாடு
இல்லாவிட்டால்
வெறும் வயிறு
இடைக்கிடையில் தேநீர் அருந்த
சீனியும் இல்லை
தேயிலையும் இல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வளங்கல் அடுப்படியில்
வடிக்கும் கஞ்சிக்கு
நீண்ட வரிசை
அரிசி குற்றும் ஆலையில்
உமி வெளியேறும் குழாய்க்குள்
அரிசியும் சேர்ந்து வராதா
என்ற ஏக்கத்தில் மக்கள்
சேர்ந்து வரும் அரிசியை
சுளகு கொண்டு
புடைத்தெடுக்கும் நிலை

கொள்ளை விலையில்
நகைக் கொள்வனவு ஒரு புறம்
வாகனத்தில் வரும் பொருளை
இடையில் தடுத்து
பகல் கொள்ளையில் ஈடுபடும்
கூட்டம் மறுபுறம்

ஒரு நாள்
காவல் காக்கும் பிள்ளைகளுக்கு
எடுத்துச் செல்லப்பட்ட
பாணை
வழியில் மறித்து
அதே இடத்தில் உண்ட
சம்பவமும் உண்டு
அதுபோல்
கப்பலில் வரும் உணவை
களஞ்சியத்துக்கு
கொண்டு செல்லும் வழியில்
பறித்து பங்கிட்ட
நிகழ்வும் உண்டு

(ஒரு பவுண் நகை - 14000/=)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இங்கு களஞ்சியங்கள் இல்லை
பங்கிட்டு கொடுப்பதற்கு
இடமுமில்லை
எங்கும் மக்கள் வெள்ளம்
இடம் குறுகிவிட்டது
வாகனங்கள்
களஞ்சியங்களாய் மாறின
அத்தோடு அவைகளே
கடைகளாகவும் மாறின

இடம் குறுக குறுக
எறிகணைகள் வெறும் நிலத்தில்
விழுவதாயும் இல்லை
மனிதர்களின் தலைகளின் மேல்
அல்லது நிறுத்தியிருக்கும்
உணவு வாகனங்களின்மேல்
விழும்
வாகனங்களின் மேல்
எறிகணைகள் வீழ்ந்து
கப்பலில் இருந்து
உணவு ஏற்றிய
சூட்டோடு சூடாய் அவை
நெருப்போடு நாசமான
கதையும் உண்டு
கதைகள் நீள நீள
நெருப்போடு நெருப்பாய்
மக்களின் வயிறும்
பற்றியெரிந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காத்திருப்பு

**2009 மே மாதம் 18க்குப் பின்**


**நலன்புரி முகாமுக்குள் - செட்டிக்குளம்**

மரணம்
உறுதியாகிவிட்டது
முகாம் வாழ்வு பழகிவிட்டது
ஒருநேர உணவுக்காக
அலைவதும்
பொருள் தேடி
வாகனத்திற்கு பின்
முண்டியடித்து ஓடுவதும்
இயல்பாகிவிட்டது
வரிசையில் நிற்கும் மனிதர்கள்
செத்து விழுவதும்
தாகம் தீர்க்க
நீர் எடுக்க
நீண்ட வரிசையில்
நீண்ட நேரம் காத்திருக்கும்
காத்திருப்பும் பழகிவிட்டது.

அன்று
கடற்கரை படுக்கையில்
மனிதர் பட்டபாடுகள் பல
மாத்தளன் தொடங்கி
முள்ளிவாய்க்கால் வரை
சொல்லி சொல்லி
கடந்த துன்பங்கள் பல
எத்தனை உறவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எத்தனை உயிர்கள்
மாண்டவர் எத்தனை
மீண்டவர் எத்தனை
கணக்கெடுப்பு
இன்னும் இல்லை

எத்தனை பொழுதுகள்
இருளக்கூடாது
என்று ஏங்கினோம்,
எத்தனை இரவுகள்
விடியக்கூடாது
என்று கலங்கினோம்
பொழுதுகளும்
இரவுகளும்
நீளவில்லை
ஆனாலும்
துயரங்கள் நிறைந்தன
துன்பங்கள் நீண்டன

கொத்துக் கொத்தாக
கொத்துக்குண்டுகளும்
வரிசை வரிசையாய்
துப்பாக்கிச் சூடுகளும்
வானத்தில் ரீங்காரமிடும்
வண்டுகளும்
அவைகள் பின் வரும்
இயந்திரக் கழுகுகளும்
எத்தனை உயிர்களை
எப்படியெல்லாம் பறித்தன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பங்கர் வாழ்வும்
கஞ்சிக் கொட்டில்களின்
அருகில்
நிலையெடுப்பும்
உணவுக்காக
சமையல்கூடங்களை
தேடும் தேடல்களும்
உணவுப் பொருள்களுக்காக
சங்கங்களில் நீளும்
வரிசைகளும்
வரலாற்று நிகழ்வாக மாறின
காத்திருக்கும் வரலாறு
இருண்ட
நீண்ட வரலாறாக மாறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *பிழை...*

பிழை
பலருக்கு இது பிழை
எல்லோரும் வாறாங்கள்
நீங்கள் மட்டும் ஏன்
ஏன்?

அரசுக்கு இது பிழை
அரசியல்வாதிகளுக்கு இது பிழை
இராணுவத்தினருக்கு இது பிழை
மதத்தலைவர்களுக்கு இது பிழை
புத்திஜீவிகளாகத் தம்மை
கருதியவர்களுக்கும் இது பிழை
எல்லோரும் சேர்ந்து விசாரணை,
இறுதிமட்டும் மக்களோடு
ஒன்றாக நின்றது பிழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களிடம்
ஒரு வினா!

இறுதிமட்டும் அங்கு
இருந்ததென்ன
ஆடு மாடுகளா?
சாட்டை அடிவாங்கி
உடல் காயங்களோடு
சிலுவை சுமந்த மக்கள்

அப்படியென்றால்

ஏழையருக்கு நற்செய்தி சொல்ல
ஒடுக்கப்பட்டவருக்கு
விடுதலை வாழ்வு கொடுக்க

இதுக்கெல்லாம் என்ன அர்த்தம்?


மனச்சாட்சி
உள்ளவர்களுக்கு மட்டுமே
இது சரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புத் தாயே!

(2009 ஆம் ஆண்டு 08 ஆம் மாதம் நடைபெற்ற மடு அன்னையின் திருவிழாவின் போது நலன்புரி முகாமிலிருந்த எங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்ட போது ஏற்பட்ட மனப்பதிவு)



அகதிகளுக்கும்
கைவிடப்பட்டவர்களுக்கும்
கரம் கொடுத்து
தாங்கி நிற்கும்
தாயே!
உம் பதிக்கு
வருகின்ற நாங்கள்
இன்று
கம்பி வேலிகளுக்குள்ளே
அ(ை)கதிகளாக, அநாதைகளாக
அடைக்கப்பட்டுக் கிடக்கிறோம்

கேட்பாரற்று
உதவிக்கரம் கொடுப்பாரற்று
அடிமைகளாக, ஏதிலிகளாக
செத்து மடிகிறோம்

இங்கு
நாளும்
புதிய புதிய பதிவுகள்
பேச்சளவு விடுகைக்கா
இலங்கைத் தீவின்
அரசியல் குட்டையிலே
வாக்குச் சேகரிப்பு
பொருள் நாங்கள்
சர்வதேச நாடுகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வையிலே
பாடு பொருள் நாங்கள்

அம்மா, இங்கு
உம் பிள்ளைகள்
ஏலம் போகின்றோமே
எமக்கு உதவ
யாருமில்லை

காலம் காலமாக
உம்பதி சரணடைந்து
உமது அருள் வேண்டும்
நாங்கள்
கம்பிக்கூட்டுக்குள்ளும்
அதிகார பிடிக்குள்ளும்
அழுக்கு சேற்றுக்குள்ளும்
அணுவணுவாக மடிகிறோம்


முட்கம்பி வேலிக்குள்
பிஞ்சுப் பாலகர்கள்
மருந்தின்றி மடிகிறார்கள்
கண்துடைப்பு வைத்தியசாலைக்குள்
கைகட்டி வாய்பொத்தி
உம்பிள்ளைகள்
ஆகுதி ஆகிறார்கள்
கம்பி வேலியருகில்
அடிமைகளாக
அந்நியனுக்கு சேவகம் செய்ய
வீதியெங்கும்
சிங்கக்கொடி தாங்கி
உம் விருப்பின்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம் பதிக்கு
அரசியல் சாயம் பூசியே
சாரை சாரையாக
மதம் பிடித்த தலைவர்களும்
அவர்களின் சேனையினரும்
எம் முன்னால்
உலாச் செல்லும்போது
நெஞ்சே பற்றி எரிகின்றது
தாயே, என்ன பிழை
நாம் செய்தோம்

உம் பதிக்கு வர
நூற்றெட்டு விதிமுறைகள்
உமது அருள் வேண்ட
ஒரு காலக்கெடு
உம் தரிசனம் காண
எத்தனையே பதிவுகளும்
பயண அனுமதிகளும்
தாயே
பொறுக்குமா
உம் நெஞ்சம்
கம்பி வேலிக்குள்ளே
நோயினாலும்
பசி பட்டினியாலும்
பயத்தினாலும்
விடுதலை நாளை எண்ணி
வாழும் எங்களை
தரிசியும் தாயே
உம் பதியைவிட்டு
எம்மிடம் வாரும்





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மெல்லத் தமிழ் இனி சாகும்

போரின் பின்பு முதல் தடவையாக A9வீதியால் பயணித்த போது ஏற்பட்ட மனப்பதிவுகள்

வன்னி மண்
தமிழர் வீரம் கூறும்
வணங்கா மண்
தமிழர்
கலாசாரமும்
பண்பாடும்
கொடிகட்டி
பறந்தமண்
இந்த மண் இன்று
சோபை இழந்து கிடக்கிறது
இங்கு
அந்நியர் படையெடுப்பும்
மண்ணின் மைந்தர்கள்
படுகொலையும்
தாராளமாய் முடிவுற்று
தமிழர் சின்னங்கள்
வன்கொடுமை
செய்யப்பட்டு கிடந்தன

தாண்டிக்குளத்தை தாண்ட
தமிழரின் சின்னங்கள்
மண்ணுக்குள் தாண்டுகிடந்தன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதியெங்கும்
முழத்துக்கு முழம்
காவலரண்களும்
தனிச் சிங்களத்தில்
பதாதைகளும் நடுகற்களும்

மாங்குளம் பிரதான வீதியை
படைமுகாம்
ஆக்கிரமிக்க
வீதியோரமிருந்த
கட்டடங்கள் எல்லாம்
சுக்குநூறாய் கிடந்தன
பழம் பெரும்
முறிகண்டி ஆலயம்
படைமுகாமாய் போனது
சிறுக சிறுக
கட்டி வளர்த்த
வாழ்விடங்கள்
இருந்த இடமே
இல்லாமல் போயின



கலை அழகுடன்
அமைக்கப்பட்ட
கலாசார மண்டபம்
கல்லின் மேல் கல்
இல்லாமல் போனது
பொழுது போக்கு பூங்கா
இராணுவச் சின்னமாய்
உருவெடுத்தது



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புத்தர் சிலைகளுக்கு குறைவில்லை
தியானநிலை புத்தர்சிலை
நகரின் மையப்பகுதியில்
முளைவிட்டது

தமிழர்
நிர்வாக தலைநகரம்
கிளிநொச்சி
சிதைந்து போய்க்கிடந்தது
தமிழர் பண்பாட்டு
கலாசார சின்னங்கள்
தமிழர் வீரம் கூறும்
நினைவிடங்கள்
வன்முறையாளர்களால்
கற்பழிக்கப்பட்டு
சேடமிழுக்க
பௌத்த சிங்கள
இனவாதத்தை கக்கும்
சின்னங்களும் விகாரைகளும்
ஆங்காங்கே
பிரசவமாகிக் கொண்டிருந்தன
இனி
கிளிநொச்சியும்
தனிச் சிங்கள மாவட்டம்
தமிழர்
வந்தேறு குடிகள்
வரலாறும்
இப்படித்தான் மாறும்
பக்கத்துணையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனையிறவிலும்
ஆக்கரமிப்பின் அடையாளமாக
ஒரு தூபி

ஏற்கெனவே
கிழக்கு மாகாணம்
கலப்பு மாகாணமாய்ப் போச்சு
மன்னார் பட்டினமும்
தனித்தமிழை இழந்தது
இனி
வன்னி மாவட்டங்களும்
சிங்கள இனவாத
சாயம் பூச
கலப்பு மாவட்டங்களாகும்
தமிழ் குடி
இருந்த இடம்
இல்லாமல் போகும்
விகாரைகளும் புத்தசிலைகளும்
தனிச்சிங்களம் கக்க
சிங்களக் குடியேற்றங்கள்
முளைக்கும்
காலப்போக்கில்
ஒரே ஒரு
தனித்தமிழ் மாவட்டம்
யாழ்ப்பாணமும்
தன் நிலை இழக்கும்

தமிழா
கண்திற, இல்லையேல்
மெல்ல தமிழ் இனி சாகும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## *முடிவு*

(நலன்புரி முகாமுக்குள் இருந்து)

வாழ்வு
சிலருக்கு குறுகியது
பலருக்கு நீண்டது
நீண்ட வாழ்க்கையில்
பலருக்கு
நிறைந்த துன்பம்
தமிழனுக்கு
சொல்லத் தேவையில்லை
அதிலே
துன்பத்தோடு பிறந்து
துன்பத்தோடு மரணித்தவர் பலர்
இன்னும் பலர்
இன்றும்
முள்ளுக்கம்பிக்குள்ளே
துன்பத்தோடு போராடுகிறார்கள்
என்ன வாழ்க்கை?

ஒரு கூட்டம்
முகாமுக்குள்
உயிருக்கு போராட
வெளியிலே
இன்னொரு கூட்டம்
போராடும் மக்களை
அடகு வைத்து
பணம் சம்பாதிக்க



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விரல்விட்டு
எண்ணக்கூடிய
இன்னொரு கூட்டம்
பயந்து, நடுங்கி
திரைமறைவில்
போராடும் மக்களுக்கு
ஏதாவது செய்ய வேண்டுமென்று
முயற்சி செய்ய
இவைகளை விட
இன்னொரு கூட்டம்
என்ன நடந்தால்
எங்களுக்கென்ன
நானுண்டு, என் வாழ்வுண்டு என்று
ஏனோ தானோ
வாழ்க்கை வாழுது

பரிதாபம்
ஊடகங்கள்
ஒன்றைப் பத்தாக்கி
பூசி மெழுகி
பொய் சொல்லுது
எட்டத்திலை இருக்கிற
ஏனோதானோ சனம்
இதை நம்புது
இப்படித்தான்
முள்ளிவாய்க்காலில்
இறுதி சண்டையில்
சனம் சாக



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

BBC இரவு பகல்
சேவை செய்து
பக்கசார்போடை
எல்லாத் துன்பங்களையும்
இருட்டடிப்பு செய்தது
மக்களை கொன்று குவித்தது
என்ன செய்வம்

காசு உள்ளவன்
செல்வாக்கு உள்ளவன்
முகாமைவிட்டு வெளியேற
நேற்று உள்ள இருந்தவன்
இன்று இந்தியாவிலை நிற்கிறான்
இன்னும் கொஞ்சப்பேர்
காசை கொஞ்சம்
கூட குடுத்து
சுவிசிலை நிற்கினம்

உள்ளை
காட்டிக் கொடுப்பு தாராளம்
ஐந்தை, பத்தை கொடுத்தா
காட்டிக் கொடுக்கமாட்டினம்
அங்கை பிள்ளை பிடிச்சவை
இங்கை வால் பிடிக்கினம்
முள்ளந்தண்டு இல்லாதவை
அப்பாவி சனம்
பாவம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISBN 978-955-41168-0-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org